வசனம்.

"காலம் பனிப்பெய்யும் கருகு சம்பா நெல் விளையும்.
சீரு பனிப்பெய்யும் நாட்டில் மிளகு சம்பா நெல் விளையும்"

இப்படி இருக்கும் காலத்தில் குன்றுடையா சாமிக்கும், தாமரைக்கும், காலம் நெருங்கியது. இருவரும் சின்னண்ணசாமியையும், பெரியண்ண சாமியையும் கூப்பிட்டு 'அப்பா, சாமிகளே! எங்களுக்கு முடிவுகாலம் நெருங்கி விட்டது; நாங்கள் தெய்வ சபை போய்ச்சேர வேண்டும், ஆகையால், உங்களுக்கு ஒன்று சொல்கிறோம் கேளுங்கள்! சோழ தேசத்து அரசருக்கு, ஏதாவது கெடுதல் செய்து விடாதீர்கள், ஏன் என்றால், அவர்தான் உங்கள் அப்பாவாகிய கோளத்தாக் கவுண்டரை இந்தப் பொன்னிவள நாட்டில் வைத்து, பங்காளிகளை தங்கவள நாட்டில் வைத்து, எல்லை பகிர்ந்து எல்லைக்கல் போட்டுக் கொடுத்தார்; ஆகையால், அவர்களை ஒன்றும் செய்து விடாதீர்கள்; பிறகு, பங்காளிகள் நம்மளுக்கு எவ்வளவு கெடுதல்கள் செய்திருந்தாலும், அவர்கள் செய்ததை, அவர்களே! அனுபவிக்கட்டும், அவர்களையும் ஒன்றும் செய்து விடாதீர்கள். பிறகு, செல்லாத்தாளுக்கு, நாள்தோறும் மூன்று கால பூஜையும்,

சரியாக செய்து வாருங்கள்; இந்த நாடு, பூமி, செல்வங்கள் எல்லாம் அவளுடையது தான், ஆகையால், பூஜை தவறாமல் செய்ய வேண்டும். பிறகு, கிராமத்துக் கவுண்டர்கள் நம்மளுக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார்கள். அவர்கள் என்ன குற்றம் செய்தாலும் நீங்கள் மனம் பொறுத்து நீதி தவறாமல் ஆட்சி செய்து வாருங்கள்.

சி. சாமி: அம்மா! நல்லது.

தாமரை: மறுபடி, உங்கள் கூடப் பிறந்த தங்காளை! நீங்கள் தான், கவனிக்க வேண்டும். அவள் என்ன செய்தாலும் மனம் பொறுத்து, அவள் கேட்டாலும், உடனே செய்து கொடுத்து, அவளிடம் கோபிக்காமல் நடந்து கொள்ள வேண்டும்; அவள், உங்களுக்கு, முன், பின் வரும் நன்மை தீமைகளை முன்னமே கனவு கண்டு சொல்வாள், அப்பேர்ப்பட்ட வரத்துடன் பிறந்திருக்கிறாள். நாங்கள், இறந்த பின், அவளுக்கு தாய், தகப்பன் எல்லாம் நீங்கள் தான். பிறகு, ஒரு நல்ல இடம் பார்த்து அவளுக்கு திருமணம் செய்து வைத்து விடுங்கள்.

சி. சாமி: சரி, நல்லது தாயே! அப்படியே நடந்து கொள்கிறோம்.

பாட்டு,,

"அப்படியே நல்லதென்று இனி நல்லதென்று.
அன்புடனே அதிகாரம் நடக்குதுபார்.
அந்தப்பிரகாரம் இனி பிரகாரம்
நடக்குதுபார் நாட்டில் நல்லபருவம்"

---

இப்படி சில நாள் சென்றதும், எமன் வந்து. குன்னுடைய ராஜர் தாமரை இருவர் உயிரையும் கறந்து கொண்டு தெய்வலோகம் சென்றார்.

குன்னுடையா ராஜரும் தாமரையும் காலம் முடிவாகி தெய்வ சபை சென்றதை ஐம்பத்தாறு தேச அரசர்களுக்கும், கிராமத்துக் கவுண்டர்களுக்கும், தெரிவித்து. எல்லோரும் வந்து, பெரியண்ண சாமியையும், சின்னண்ண சாமியையும், தங்காளையும் கண்டு துக்கம் விசாரித்தார்கள். p.174 p.175 பிறகு, கருமாதிச்சீர் செய்து, ஆயிரம் காகத்துக்கு சாதம் கொடுத்தார்கள். செய்யவேண்டிய சடங்குகள் எல்லாம் செய்து முடிந்ததும் அரசர்களும், கிராமத்துக் கவுண்டர்களும் விடை பெற்று அவரவர்கள் ஊர் போய் சேர்ந்தார்கள். பிறகு, பெரியண்ண சாமியும், சின்னண்ண சாமியும் நீதிதவறாமல்

நாட்டை ஆண்டுவந்தார்கள்.

பாட்டு:

"செங்கோலு அதிகாரம் இனி அதிகாரம்
செலுத்திப்பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்.
தங்கவிரல் அதிகாரம் இனி அதிகாரம்
தனிச்சுப்பட்டம் அண்ணருகள்
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்.
காலம் நல்ல பனிப்பேயும் இனி பனிப்பேயும்
பொன்னிவள நாட்டில் கருகுசம்பா
நெல் விளையும் அங்கு நெல் விளையும்.
நீடு நல்லோ பனிப்பேயும் இனி பனிப்பேயும்
பொன்னிவள நாட்டில் மிளகுசம்பா
நெல் விளையும் அங்கு நெல் விளையும்."

வசனம்:

"ஆனாடு, கோனாடு, அழகு பொன்னிவள நாடு,
இலுக்காம் புலியூர், சிறந்த பொன்னிவள நாடு,
மண் போட்டுப் பொன் விளையும்
மகுட பொன்னிவள நாடு, ஆனைகட்டி
தாம்பாடும் அழகு பொன்னிவள நாடு,
மாதம் மூன்று மழை பெயும் வருஷமொரு
கல்மாரி, காட்டுக்களங்காணும் கரு குளிர்
க்க நெல்க்காணும்."

பெரியண்ணசாமியும், சின்னண்ணசாமியும், செல்லாத்தாளுக்கு மூன்று கால பூஜையும் சரியாக நடத்திவந்தார்.

அண்ணருடன் பிறந்த அருக்காணி நல்லதங்கு, பொன்னருடன் பிறந்துவேடை மயில் நல்லதங்கு. திருவின்த்தாரியில் படுத்து நித்திரை செய்யும் போது.

பாட்டு

" ஆடுது அண்ணவூஞ்சல் பத்தினிக்கு
அசைந்து வரும் பொன்சுச்சம் பார்வதிக்கு
ஓடுதுபார் வெள்ளிரதம் பத்தினிக்கு
ஓவைந்து வரும் பெண பதுமை பார்வதிக்கு.
பாடுதுபார் அண்ணவூஞ்சல் பத்தினிக்கு
பறந்து வரும் பொன்பதுமை பார்வதிக்கு
அண்ணவூஞ்சல் தொட்டிலிலே பத்தினியா
அயர்ந்து நித்திரை செய்யுறாளே பார்வதியா"

அப்போது, அண்ணர்கள் இருவரும் பகடை விளையாடச் சென்றார்கள். மாயவரும் வந்து இவர்களுடன் சேர்ந்து பகடை விளையாடும் போது மாயவர், சின்னண்ணசாமிக்குத் தெரியாமல், அவருக்கு மார் விலங்கு, மணிவிலங்கு, கைவிலங்கு, தோள் விலங்கு, தொடை விலங்கு, இப்படி பனிரண்டு விலங்

கும் போட்டு விட்டு, பகடை விளையாடினார்.
இப்படி விலங்கு போட்டு விளையாடும் காரணம்
என்னவென்றால், சின்னண்ணசாமிக்கு பணிரண்
டு யானை பலம் உள்ளது. கோபம் வந்து திடீர்
என்று எழுந்து] p.175 p.176 அடித்து விடுவார் என்று,
தினம் பகடை விளையாடும் போது மாயவர் விலங்
ங்குகளை பூட்டி விடுவார். மறுபடி விளையா
ட்டு முடிந்தும், விலங்குகளை கத்தரித்து
விடுவார். ஆனால், விலங்கு பூட்டுவதோ,
கத்தரிப்பதோ, சின்னண்ணசாமிக்குத்
தெரியாது. அன்று, விளையாட்டு முடிந்
ததும் மாயவர் புறப்பட்டு சென்று விட்
டார். பிறகு சின்னண்ணசாமியும் பெரி
யண்ணசாமியும் எழுந்து சாப்பாட்டுக்
குச் சென்றார்கள்.

சி.சாமி: 'அடி, குப்பி! பார்வதி, இன்னும் தூங்குகி
றாளா?'

குப்பி: 'ஆமாம், சாமி! இன்னும் தூங்குகிறார்கள்!'

சி.சாமி: 'சரி, நல்லது! அவள் தூங்கி எழுந்ததும், குளித்
து விட்டு, சாதம் போட்டு பிறகு திருவிளைத்
தூளியில் வைத்து திருவிளைத்தூளியை திருப்
பி விட்டு, ஜாக்கிரதையாக பார்த்துக்
கொள்ளுங்கள்' என்று, சொல்லி விட்டு

சாமிகள் இருவரும் வெந்நீர் அறைக்கு சென்று குளித்து விட்டு, ஆடை உடுத்து, சாப்பிட்டுவிட்டு இருவரும் வேணப்பட்ட கசாலையில் வந்து தாம்பூலம் போட்டு உட்கார்ந்தார்கள்.

சி.சாமி! ஏனுங்க, அண்ணா! தங்கவள நாட்டில் ஆயிரம் வீட்டுப் பங்காளிகளும், நம், தாய் தந்தையை, ஐந்து வருஷம் நாடுவிட்டு நாடு, தேசம் விட்டுத் தேசம், ஊர் விட்டு ஊர் முடுக்கி விட்டிருந்தான் சண்டாளன்! ஆகையால், அண்ணா! நாம், போய், பங்காளிகள் எவ்வளவு பெரியவன்! அவன் எப்பேர்ப்பட்ட சாமர்த்தியசாலி! என்பதை, ஒரு முறை பார்த்து வர வேண்டும்!

பெ.சாமி! சின்னையா! வாண்டாமப்பா! நம், தாய், தந்தை காலம் முடிவாகி போகுமுன், சோழதேச அரசருக்கும், பங்காளிகளுக்கும் ஒரு தொந்தரவும் செய்யக்கூடாது! என்று, சொன்னார்களே? அதை மறந்து விட்டாயா?

சி.சாமி! அண்ணா! தாய்தந்தை சொல்லிவிட்டு போனது உண்மைதான். ஆனால், நாம் ஒருவரிடமும் வம்பு செய்வதில்லை,

ஆனால், பங்காளிகள் நம், தாய், தந்தையை
செய்யாத கொடுமைகள் செய்திருக்கிறான்,
மிதித்தவன் காலை மிதிக்காமல் விடக்கூடா
து அண்ணா! நாம் வளர்த்த பசு, நம்மை
யே கொல்ல வரும் போது, நாம் அதைக்
கொல்லாமல் விடுவதா? உங்களுக்கு
பயமாக இருந்தால், நீங்கள் வர வேண்டாம்
பார்வதியாளை பார்த்துக் கொள்ளுங்கள்,
நானும், சாம்புகனும் போய் வருகிறோம்
என்று, சின்னண்ணசாம் கோபத்துடன் பேசு
ம் போது, சாம்புகன் காதில் கேட்டு ஓடி
வந்து சின்னண்ணசாமியை நமஸ்காரம்
செய்து; சின்ன ராஜாவே! தாங்கள் பெரிய
ராஜாவிடம் என்னமோ கோபமாக பேசு
கிறீர்களே? என்ன சமாச்சாரம்? என்று,
கேட்டான்.'

சி.சாம். 'அடே, சாம்புகா! அண்ணன், என்ன
சொல்கிறார் பார்த்தாயா! நான், தங்களை
நாடு பங்காளிகள், நம், தாய், தந்தையை செய்
யாத கொடுமையெல்லாம் செய்திருக்கிறான்,
அவன் திறமையை நாம் போய் ஒருகை
பார்த்து வருவோம் என்று சொல்லு

கிறேன், அதற்கு, அவர் என்னசொல்கிறார்
தெரியுமா? நம்,தாய்,தகப்பன் பங்காளிகள்
மேல் சண்டைக்கு போகவேண்டாமென்று
சொன்னார்களாம், சாகப்போகிறவர் சொன்
னதைக் கேட்கவேண்டாமென்று சொல்கிறார்,
ஏண்டா, சாம்புகா! நம்மை மிதித்தவன் காலை,
மிதிக்காமல் விடுவதா? அதற்கு, நாம்
இருப்பதை விட, சாவது மேல். அதற்குத்
தான், அவரிடம் சத்தம் செய்து கொண்
டிருந்தேன், சரி, நீ, விபரமாக அண்ணனுக்கு
சொல்.

சாம்புகன். சின்னராஜாவே! பெரியராஜாவை, சண்
டைப்பிடிக்காதீர்கள், அவர், வரவேண்
டாம், அரண்மனையில் இருக்கட்டும்,
நாம் இருவரும் போய் வரலாம் ராஜாவே!
(இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த
பெரியண்ணசாமி, சாம்புகனை நோக்கி சாம்
புகா! நீயும் போகிறாயா?என்றார்.) P. 176

177
சி.சாமி. ஆமாங்க, அண்ணா! நானும், சாம்புகனும்
போய் வருகிறோம், நீங்கள் அரண்மனையில்
இருங்கள்.

பெ.சாமி. சாமி! நீங்கள். இருவரும் போகும் போது,
நான் அரண்மனையில் எதற்கு, இருக்கிறேன்
நானும் வருகிறேன்.

சி.சாம். 'சாம்புகா! பார்த்தாயா! அண்ணன் சொல்வதை, இப்போது நானும் வருகிறேன் என்று சொல்கிறார்.'

சாம்புகன். 'சாமி, நல்லது! அவர் இஷ்டம் போல் நடக்கட்டும், வேண்டாமென்று சொல்ல வேண்டாம்.'

சி.சாம். 'சரி! நீ போய், நீலா இரண்டையும் அலங்காரம் செய்து, அரண்மனை முன் கொண்டு வந்து நிறுத்து. நாங்கள் போய் அலங்காரம் செய்து கொண்டு வருகிறோம்' என்று, சாமி இருவரும் எழுந்து கச்சு கட்டும் அறைக்கு சென்றார்கள்.

பாட்டு

"சீட்டி சீட்டி தலப்பாகாம்
செண்டு கட்டும் என்சாமி முண்டாசாம்.
கட்டு கட்டு வருக்க கங்களாம்
தனி வருக்கம் என்சாமி சோடித்தாரே.
ஏட்டி ஏட்டி வருக்கங்களாம்
பத்திர் வருக்கம் என்சாமி சோடித்தார்கள்"

சாமிகள் இருவருக்கும் பொட்டுத் துலங்குறது பொழுதை மறைக்குது பார்.
பட்டுத் துலங்குறது பகவானை நிறுத்துது பார்.
இருவரும் பொன்னுருக்கி மாளிகைக்கு சென்று, கத்தியை எடுத்து இடையில் சொருகி

வெளியில் வந்து நின்றார்கள்.

சாமிகள்:/ அடி, குப்பி! பார்வதி தூங்கி எழுந்து, அண்ணார்கள் எங்கே? என்று கேட்டால், தூங்கவளநாடு போயிருப்பதாக சொல்ல வேண்டாம், ஆடிரமா நிலத்தை சுற்றி பார்த்து வர போயிருப்பதாக சொல், நாங்கள் போய் விட்டு சீக்கிரம் வந்து விடுகிறோம்! என்று, இருவரும் வெளியில் வந்து. 'அடே சாம்புகா! நாங்கள் நிலாவில் முன்னால் செல்கிறோம். நீ சீக்கிரம் பின்னால் வந்து சேர்' என்று சொல்லிவிட்டு சாமிகள் இருவரும் நிலாவில் ஏறினார்கள்.

பாட்டு

"ஏறினார் என் சாமி நிலாவில்
எடுத்தடிச்சார் என்சாமி பொன்சவுக்கை
தாண்டினார் என் சாமி நிலாவில்
தெறிச்சடிச்சார் என்சாமி நொணசவுக்கில்
கல்லுக்கல்லு கடக்குதுபார் நிலா
கருமலையை எண்ணத்தாக்குதுபார்.
பில்லு பில்லுக் கடக்குதுபார் நிலா
பிலிமலையை என் சாமி தாண்டுதுபார்.
முள்ளி முள்ளி முறிக்குதுபார் நிலாவும்
முடிமலையை என்சாமி தாண்டுதுபார்"

நீலா இரண்டும் போன வேகம், துங்கவள நாடு
நடுங்கியது. நீலா வரும் சத்தம் கேட்டு
துங்கவளநாடு பங்காளி கவுண்டர், கவுண்டி
ச்சிகள் எல்லோரும் பயந்து, 'அக்கா! அக்கா!!
அறுபது வருஷத்திற்குமுன், குடுகுடுப்பான்
வந்ததே, அதுபோல் இப்போதும் வந்து
P. 177
விட்டது போல் இருக்கிறது!' என்று, ஒருவர்
க்கொருவர் பேசிக்கொண்டு பயந்து, நடுங்
கினார்கள். இப்படியிருக்கும் போது
பெரியண்ணசாமியும், சின்னண்ணசாமியும் துங்
கவளநாடு வந்து பள்ளிக்கூட சாவடி அரு
கில் இறங்கினார்கள். அதற்குள் சாம்பு
கனும் வந்து சேர்ந்தான்.

சி.சாம்: 'அடே, சாம்புகா! நீலா, இரண்டையும் பிடி
த்து கட்டிவிட்டு, உள்ளே வா' என்று,
சொல்லிவிட்டு, சாமி இருவரும் பள்ளிக்
கூடத்தின் உள்ளே நுழைந்தார்கள். இரு
வரும் யாரையும் கவனிக்காமல் சென்று
ஒரு பெஞ்சியின் மேல் உட்கார்ந்து கொ
ண்டார்கள். சாம்புகன், நீலா இரண்டையும்
கட்டிவிட்டு, இருபத்திநாலு முழ சல்லாப
வேஷ்டியை தலையில் உருமாலாக் கட்டி,
தோட்டித்தடியை கையில் எடுத்து

பள்ளிக்கூட கதவின் அருகில் வந்து நின்று கொண்டான். அந்தப்பள்ளிக்கூடத்தில், பங்காளிக்கவுண்டர்கள் குழந்தைகள் எல்லோரும் படித்துக் கொண்டிருந்தார்கள். உபாத்தியாயர் ஆறுபேர் இருந்தார்கள். பெரியண்ணசாமியும், சின்னண்ணசாமியும் பெஞ்சியின் மேல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, பெரிய வீட்டுக்கவுண்டர் மகன் மற்ற பையன்களிடம் / இவன், யாரோ! தெரியவில்லை, நம்மை கேட்காமலே, பெஞ்சியின் மேல் உட்கார்ந்து கொண்டான், இங்கு யார் வந்தாலும், நம்மை கேட்காமல் பெஞ்சியின் மேல் உட்காரமாண்டார்கள், இவர்கள் இரண்டு பேரும் நம்மைக் கொஞ்சம் கூட மதிக்காமல் உட்கார்ந்து கொண்டார்கள், இவர்களை உதைக்காமல் விடக்கூடாது என்று, எல்லாக்குழந்தைகளும் ஒன்று சேர்ந்து, சாமி இருவரையும் அடிப்பதற்கு தயாராய் நின்றார்கள். இதையெல்லாம் பார்த்து, சின்னண்ணசாமி, நம்மை அடிக்க வருகிறார்கள் என்று தெரிந்து, தெய்வசபையை நினைத்து, மாயவனை நினைத்து, ஆபத்து பாந்தவா! அநாதரக்ஷகா! எங்களை அடிப்பதற்கு

வருகிறார்கள், ஆயிரம் பையனையும், என் உள்ளங்கையில் அடக்க வேண்டும், அதற்கு தாங்கள் அருள் புரிய வேண்டும் மாயவா! என்று சின்னண்ண சாமி, மாயவரை நினைக்கும் போது, இதை மாயவர் பார்த்து, 'ஆகா! குழந்தைகள் இரண்டும், பங்காளி மேல் சண்டைக்குப் போய் நம்மை நினைக்கிறார்கள், நாம் போய் காப்பாற்ற வேண்டுமென்று, கண் மூடி, கண் திறப்பதற்குள் தங்களை நாடு வந்து, ஈ போல் வடிவெடுத்து சின்னண்ண சாமியின் கத்தியில் ஒட்டினார். அப்போது, சின்னண்ண சாமிக்கு, ஒரு புஜம் இருபத்தி நாலு புஜம் இருப்பது போல் பலம் உண்டாகியது. சாமி, திடீரென்று எழுந்து நின்று, 'அடே, சாம்புகா! கதவை சாத்தி தாளிட்டு விட்டு ஓடிவா!' என்றார். (Next line) உபாத்தியாயர் ஆறு பேரும் பயந்து, பின்புறம் இருந்து கதவை திறந்து வெளியே போய் கதவை சாத்தி விட்டு, அவர்கள் வீட்டுக்கு ஓட்டம் பிடித்தார்கள்.

சி. சாமி: 'அடே, சாம்புகா! பத்து பையன்களை ஒன்றாக சேர்த்து, சவுக்கை எடுத்து, நன்றாக அடியடா' என்றதும், சாம்புகன் சவுக்கை எடுத்து அடிக்க ஆரம்பித்தான்.

பாட்டு:

"காரா காரலாம் பருச்சி வெற்று
கார்கடியும் என்னுத்தா சாம்புகனும்
அஞ்சுமணி என்சாமி சாட்டையிலே
கெஞ்சக்கெஞ்ச பையன்களை அடிக்குறானே.
ஆறுமணி என்னுத்தா சாட்டையிலே
தாறுமாறு என்சாமி அடிக்குறானே"

பங்காளிக்கவுண்டர் பையன் எல்லோரும்
ஆளுயாரம் குதித்தார்கள். குழந்தைகளுக்கு
ரத்தம் பெருகுது, ரத்த வெள்ளம் சாயுது,
P. 178
உதிரம் பெருகுது, உதிர வெள்ளம் சாயுது.
P. 179

குழந்தைகள்: அய்யோ! சாமி! நீங்கள், என்ன சொன்னாலும் கேட்கிறோம், எங்களை அடிக்காதீர்கள்! என்று அழுதார்கள்.

சி-சாமி: அடே, பையன்களா! உங்களுடைய அப்பன்மார்கள், என், தாய், தகப்பனை ஐந்து வருஷம் கூத்த நெல் குத்திப் பிழைக்கும்படி, வீரப்பூருக்கு ஓட்டி விட்டார்கள் சண்டாளர்கள்! அதை, மூப்பலி, பிப்பலி, ~~தீர்க்குவதற்கு~~ தீர்ப்பதற்கே தான் இப்போது நாங்கள் வந்தோம்! என்று சின்னண்ணசாமிக்கு கோபம் பொறுக்காமல் கொள்ளிகொண்டு வீசியது. சாமி, கத்தியை எடுத்து பையன்கள் மேல் வீசும்போது,

பாட்டு,

"கத்தி கத்தி சுழட்டுறாது
கார்மின்னல் என்சாமி மின்னுதுபார்.
ஈட்டி ஈட்டி சுழட்டுறாது.
எதுமின்னல் என்சாமி மின்னுதுபார்."

சின்னண்ண சாமி கோபம் வந்து கத்தியை வீசும் போது, பாதிபையனை மூக்கை அறுத்து, பாதி பையனை காதை அறுத்து விட்டு, சாமியின் கைக்கு வந்து சேர்ந்தது கத்தி. 'அடே, சாம்புகா! இந்த பையன்களை, ஒவ்வொருவரையும், மும்மூன்று தோப்புக்கரணம் போட்ச் சொல்லி, இரண்டிரண்டு பைன்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி, ஆயிரம் பேரையும், ஐநூர் ஜோடியாக பிணைத்து, வீதியில் வடக்கு முகமாக முடுக்கி விட்டு போகட்டும்' என்றார். சாம்புகன், உடனே பையன்களை பிடித்துக்கட்டி, வடக்கு முகமாக முடுக்கி விட்டு விட்டான். ஆயிரம் பையன்களும், 'அய்யய்யோ! தெய்வமே! என்று,

"அச்சமில்லா நாட்டுக்கு இன்று அச்சம் வந்து நேர்ந்ததே.
ஈங்கியில்லா நாட்டுக்கு இன்று ஈங்கி வந்து நேர்ந்ததே!" என்று, அழுது காதுடன் கால் பின்னி, நடக்க முடியாமல் சென்றன.

ஆயிரம் குழந்தைகளும், இப்படி வரும் போது,
பங்காளிக் கவுண்டர் மனைவி மார்கள் வீட்டு
வேலை எல்லாம் முடித்து விட்டு, உச்சி உரு
வம், மத்தியான நேரம், எல்லோரும் பிள்ளை
யார் கோவிலில் வந்து உட்கார்ந்து.
'அக்கா! ஏனோ, இன்னும், குழந்தைகளும்
சாப்பாட்டுக்கு வரவில்லை? கவுண்டர்களும்
வரவில்லையே?' என்று ஒருவர்க் கொருவர்
பேசிக் கொண்டு இருக்கும் போது, தெற்கில்
இருந்து, ஆயிரம் குழந்தைகளும் காலுடன்
கால் பின்னிக் கொண்டு வருவதைப் பார்த்து,
கவுண்டச்சிகளில் சிலர், 'அக்கா! குழந்தை
களை, பாருங்கள்! வீதியில் வரும் போதாவது,
சண்டை போடாமல் வந்தால் என்ன? இப்படி
ஒருவர்க் கொருவர் சண்டை போட்டுக் கொ
ண்டு வருகிறார்கள்' என்று, பேசிக் கொண்டு
இருக்கும் போது, பையன்கள், அருகில் வர,
வர, அழுது கொண்டு வரும் சத்தம் கேட்டது!
எல்லோரும் எழுந்து ஓடிப்பார்க்கும் போது,
இரண்டிரண்டு பையன்களை ஒன்றாக சேர்த்
து கட்டியிருந்தது, மூக்கு, காது, எல்லாம்
அறுத்து மான பங்கம் செய்யப் பட்டிரு
ந்ததைப் பார்த்து.

கவுண்டிச்சிமார்கள். 'அட, சாமி! குழந்தைகளே! இந்துமாதிரி, உங்களை மானபங்கம் செய்தவன் யார்?' என்று கேட்டார்கள்.

குழந். 'அம்மா! வடக்கிலிருந்து இரண்டுபேர், நிலாவில் கிடுகிடுவென்று வந்தார்கள்; அவர்கள் பின்னால், பறையன் ஒருவன் வந்தான், நிலாவில் வந்த இரண்டு பையன்களும், பள்ளிக்கூட உள்ளே வந்து, எங்களைக் கேட்காமல் பெஞ்சியின் மேல் உட்கார்ந்தார்கள்; இதைப்பார்த்து நாங்கள், ஆயிரம் பேரும் அவர்களை அடிக்கப்போனோம், அப்போது, அவர்கள் இருவரில், சின்னவனாக இருந்தவன், பறையனை நோக்கி 'அடே, சாம்புகா! இதுவைச் சாத்திதாள் போடு' என்றதும், அந்தப்பறையன் கதவை சாத்தி தாள்போட்டான். அப்போது, வாத்தியார் ஆறு பேரும், பின்புறம் கதவைத் திறந்துகொண்டு வீட்டுக்கு ஓடிவிட்டார்கள், மறுபடி, அவர்கள், 'அடே சாம்புகா! எல்லோரையும் பிடித்து அடியடா' என்றான். சாம்புகன், எங்கள் எல்லோரையும் பிடித்து அடித்தான். பிறகு அந்த சின்னவன் கத்தியை எடுத்து,

p. 179, 180

வீசினான், கத்தி வந்து எங்களை, மூக்கு, காது இவை களை அறுத்து விட்டது. பிறகு, எங்களை இந்த மாதிரி இரண்டிரண்டு பேராக, பிணைத்து இழுத்து விட்டார்கள். சண்டாளர்கள்! என்று அழுதார்கள்.

கிழவண்டிச்சிமார்கள்: "ஏம்பா! அவர்கள், எத்தனை பேர் வந்தார்கள்?"

வையண்கள்: "அம்மா! மூன்றுபேர் வந்தார்கள்."

கிழவண்டிச்சி: "ஏண்டா! நீங்கள், ஆயிரம் பேர் இருந்தீர்களே! மூன்றுபேரை பிடித்து அடிக்க முடியாமல், அவர்களிடம் அடி வாங்கிக் கொண்டு இந்தக் கோலத்தில் வந்திருக்கிறீர்களா? சண்டாளர்களே!" என்று, குழந்தைகளின் தாய்மார்கள்—

பாட்டு

"சாந்தனையும் மேனியெல்லா
அங்கு மேனியெல்லாம்
சருகுபட பூமியிலே புரண்டழுதார்
அங்கு புரண்டழுதார்
புனுகனையும் மேனியெல்லாம்
அங்கு மேனியெல்லாம்
புழுதிபட பூமியிலே புரண்டழுதார்
அங்கு புரண்டழுதார்.
ஏங்கியில்லா நாட்டுக்கு அங்கு நாட்டுக்கு
ஏங்கி வந்து நேர்ந்திட்டதே
அங்கு நேர்ந்திட்டதே."

---

ஆயிரம் கவுண்டிச்சிமார்களும் இப்படி
அழுது கொண்டிருக்கும் போது, கவுண்டர்
கள் ஆயிரம் பேரும் மத்தியான சாப்பாட்டுக்
கு வீட்டுக்கு வந்தார்கள். கவுண்டிச்சிகள்
அழுவதைக் கண்டு 'பெண்ணே! ஏன் அழுகி
றீர்கள்?' என்று கேட்டார்கள்.

பெண்கள்: 'நாதா! யாரோ, வடக்கிலிருந்து மூன்று பேர்கள்
வந்து, பள்ளிக்கூடத்தில் புகுந்து நம் குழந்
தைகளை பிடித்து அடித்து, மானபங்கம்
செய்து விட்டிருப்பதைப் பாருங்கள்.'

கவுண்டர்கள்: 'பெண்ணே! சரி, எங்களுக்கு வயிறு பசிக்கிறது,
சாதம் போடுங்கள்.
~~சாதம் போட்டு வாருங்கள்~~, சாப்பிட்டு விட்டு,
பிறகு போய், யார் அடித்தது என்று விசாரி
ப்போம்' என்றார்கள்.

பெண்கள்: 'அட, சண்டாளர்களே! குழந்தைகள், அடி
இன்று, மூக்கு அறுபட்டு, அலங்கோலத்து
டன் நிற்கிறார்கள்? அதை கவனிக்காமல்
சோறு, சோறு என்று கேட்கிறீர்களே?' என்று,
ஆயிரம் பெண்களும் சொல்லும் போது,
ஆயிரம் பங்காளிக் கவுண்டர்களுக்கும்
கோபம் வந்து, ஆளுக்கொரு தடியை
எடுத்துக் கொண்டு, திண்ணைக்கு